திருமடல்

# FRATELLI TUTTI

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாய தோழமை பற்றியது

## இது என்ன?

இது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின், *Lumen fidei* (2013), மற்றும், *Laudato si´* (2015) ஆகியவற்றிற்கு பின், மூன்றாவது திருமடல்.

இது 2020, அக்டோபர் 3ம் தேதி, இத்தாலியின் அசிசியில் கையெழுத்திடப்பட்டது.

## இது எதனை அடிப்படையாகக் கொண்டது?

- அண்மை ஆண்டுகளில் திருத்தந்தையின் அக்கறைக்கு உள்ளான, உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாயத் தோழமை குறித்த கேள்விகள்.
- உலக அமைதிக்கும் ஒன்றிணைந்து வாழ்வதற்கும் தேவையான மனித உடன்பிறந்த நிலை குறித்து 2019ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இஸ்லாமிய தலைமை குரு அகமது அல் தாயெப் அவர்களுடன் இணைந்து திருத்தந்தை கையெழுத்திட்ட ஏட்டில் முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படைக் கருத்துக்கள்.

## இது முன்வைப்பது என்ன?

- உடன்பிறந்த நிலைக்கும், சமுதாயத் தோழமைக்கும் அர்ப்பணிக்கப்பட்ட சமுதாயத் திருமடல் இது.
- உடன்பிறந்த அன்பு எனும் கோட்பாட்டை பற்றிய உலகளாவிய பரிமாணத்தை விளக்குகிறது.
- உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாயத் தோழமை குறித்த புதிய கண்ணோட்டத்தை முன்வைப்பது இதன் நோக்கம்.
- ஒரே ஊனுடலைப் பகிரும் உடன்பயணிகளாகவும், ஒரே குடும்பமாகவும் கனவு காண இது நமக்கு ஊக்கமளிக்கிறது.

## இது யாருக்கென எழுதப்பட்டது?

இச்சிந்தனைகளை, உரையாடலுக்கு அழைப்பு என ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும்.

## இதன் தலைப்பு எங்கிருந்து வருகிறது?

- *Fratelli tutti* என்பது அசிசியின் புனித பிரான்சிஸ் பயன்படுத்திய பதம் (Admonitions, 6, 1).
- நற்செய்தியின் சுவையினால் குறிக்கப்பட்ட ஒரு வாழ்க்கைமுறையை முன்மொழிய, இப்பதத்தை அப்புனிதர் பயன்படுத்தினார்.
- நிலப்பரப்பு, தூரம் எனும் தடைகளைத் தாண்டிச்செல்லும் அன்பை நோக்கி அனைத்து ஆண்களையும் பெண்களையும் அழைக்கிறார் புனித பிரான்சிஸ்.

## எவ்வாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது?

- *Fratelli tutti* ஒரு பொது முன்னுரையையும், 8 பிரிவுகளையும் கொண்டுள்ளது.

முன்னுரை
பிரிவு **I** : மூடப்பட்ட ஓர் உலகின் மீது இருண்ட மேகங்கள்
பிரிவு **II** : வழியில் ஓர் அந்நியர்
பிரிவு **III** : திறந்ததோர் உலகை காண்பதும், உருவாக்குவதும்
பிரிவு **IV** : உலகம் முழுமைக்கும் திறந்ததோர் இதயம்
பிரிவு **V** : அரசியலின் இன்னும் உன்னதமான வகை
பிரிவு **VI** : சமுதாயத்தில் உரையாடலும் தோழமையும்
பிரிவு **VII** : புதுப்பிக்கப்பட்ட சந்திப்பின் பாதைகள்
பிரிவு **VIII** : நம் உலகில் உடன்பிறந்த நிலை பணியில் மதங்கள்

### கிறிஸ்தவ ஒன்றிப்பு செபம்

“தூய ஆவியாரே வாரும், உலகின் அனைத்து மனிதர்களிலும் பிரதிபலிக்கின்ற உம் அழகைக் காட்டியருளும்.
இதன் வழியாக நாங்களும், கடவுளால் மிகவும் அன்புகூரப்படும் மனித சமுதாயத்தின் வெவ்வேறு முகங்களாக இருக்கும் அனைவரும் முக்கியத்துவம் நிறைந்தவர்கள், அனைவரும் இன்றியமையாதவர்கள் என்பதை மீண்டும் கண்டுகொள்வோமாக”.
ஆமென்

திருமடல்

# FRATELLI TUTTI


திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாய தோழமை பற்றியது

## மூடப்பட்ட ஓர் உலகின் மீது இருண்ட மேகங்கள்

உலகளாவிய உடன்பிறந்த நிலையை இவ்வுலகில் முன்னேற்றுவதற்கு தடையாக இருக்கும் போக்குகளை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நோக்குகிறார்.

“உலகமயமாக்கப்பட்ட சமுதாயம் நம்மை, அயலவர்களாக மாற்றுகிறது, ஆனால், சகோதரர் சகோதரிகளாக மாற்றுவதில்லை.”



**மூடப்பட்ட ஓர் உலகின் மீதுள்ள இருண்ட மேகங்களை எவ்வழிகளில் நாம் நோக்குகிறோம்?**

- சமுதாயத்தில் பரவலாகக் காணப்படும் விரக்தியும் ஊக்கங்கெடுத்தலும்.
- உரையாடலுக்கு, ஒன்றிணைந்து வாழ்தலுக்கும் தடையாக இருக்கும் முனைவாக்கம்.
- எளிதாக "பலி கொடுத்துவிடலாம்" எனவும், நிராகரித்துவிடலாம் எனவும், எண்ணப்படும் மக்கள்.
- உரிமைகளின் சமத்துவமற்ற நிலையும், அடிமைத்தனத்தின் புதிய வடிவங்களும்.
- நன்னெறி சீரழிவுகளும், ஆன்மீக மதிப்பீடுகள் வலுவிழத்தலும்.

இன்று உன்னதமான சொற்கள், தவறான முறையில் கையாளப்படுவதை நம் பார்க்கிறோம். எடுத்துக்காட்டாக:

விடுதலை நீதி
மக்களாட்சி ஒன்றிப்பு

இத்தகைய சவால்களின் முன்னிலையில், *Fratelli Tutti* வலியுறுத்துவது, “நாம் பயணிக்கவேண்டியது, நெருக்கத்தின் பாதை; இது சந்திப்பின் கலாச்சாரம்”



நன்மைத்தனத்தின் அளவற்ற விதைகளை இறைவன் தொடர்ந்து விதைக்கிறார்.



ஒருமைப்பாடு, நீதி, அன்பு என்பவைகளோடு, ஒவ்வொரு நாளும் உணரப்பட வேண்டியது, நன்மைத்தனம்.



நம் தொடுவானத்தைக் குறுக்கிவிடும் தனிப்பட்ட வசதிகளையும் தாண்டி நோக்கும் நம்பிக்கை, உன்னத இலட்சியங்களுக்கு நம்மைத் திறந்துவிடுகிறது.

திருமடல்

# FRATELLI TUTTI

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாய தோழமை பற்றியது

## வழியில் ஓர் அந்நியர்

நல்ல சமாரியர் உவமையில் காணப்படும் வெவ்வேறு கதைமாந்தர்கள் யார்?

- தாக்குதல் நடத்தியவர்கள்
- மறுபக்கமாக கடந்து செல்பவர்கள்
- காயப்பட்ட, கைவிடப்பட்ட பலியானவர்

### இந்நிலையை எதிர்கொள்ளும்போது *Fratelli tutti* நம்மை நோக்கி கேட்பது:

?

இதிலிருக்கும் யாரோடு உங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறீர்கள்?
உங்கள் அயலவர் யார்?

“நமக்கு அயலவராக இருக்கும்வண்ணம் நெருங்கியிருப்பவர் யார் என்பதை முடிவுசெய்யாமல், நாம் அனைவருக்கும் அயலவராக மாறவேண்டும் என இயேசு நம்மிடம் கேட்கிறார்”




*Fratelli tutti* மடல், காயப்பட்ட நம் சமூகங்களுக்கு மறுவாழ்வு தருவதில் தீவிரமாக ஈடுபட நம்மை அழைக்கிறது.

இன்று, நல்ல சமாரியர் கதை மீண்டும் மீண்டும் இடம்பெறுகிறது:

1. நம் அக்கறையற்ற நிலையை நியாயப்படுத்த, தீர்மானிக்கப்பட்டவை, அல்லது, விதியைப் பற்றிய முறையீடுகள்.
2. சமுதாயம், மற்றவர்களை, குறிப்பாக, நலிந்தவர்களை புறக்கணிக்க முயல்கிறது.
3. சமுதாய ஒதுக்குதல்களை உலகம் அனுமதிக்கிறது, மற்றும், ஊக்குவிக்கிறது.
4. சமுதாய, மற்றும், அரசியல் அக்கறையற்ற நிலைகளை நாம் கண்டு வருகிறோம்.

உதவி தேவைப்படும் மக்கள், ஏங்கிருந்து வருகின்றனர் என்பதைப்பற்றி, அன்பு அக்கறை காட்டுவதில்லை.
நம்மைத் தனிமைப்படுத்தும், மற்றும், பிரித்துவைக்கும் தளைகளை உடைத்தெறியும் அன்பு, அதற்குப் பதிலாக, பாலங்களை கட்டுகிறது.



நீங்கள் மறுபக்கமாக சென்றுவிடுவீர்களா? அல்லது, சாலையோரத்தில் காயமுற்றிருப்போருக்கு உதவும்படி நிற்கிறீர்களா?

எண்ணற்ற துன்பம், மற்றும், வேதனைக்கு முன், நம்முடைய ஒரே வழி நல்ல சமாரியரைப் பின்பற்றுவதாகும்.

03

திருமடல்

# FRATELLI TUTTI

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாய தோழமை பற்றியது

## திறந்ததோர் உலகை காண்பதும், உருவாக்குவதும்

இயேசு நமக்கு கூறியுள்ளார்... “நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரிகள்“ (மத். 23:8).

### உலகளாவிய உடன்பிறந்த நிலைக்கு திறந்த உள்ளம் தேவை:

- மற்றவர்களுக்கு உண்மையில் தங்களைக் கொடையாக வழங்குவதில் மனிதர்கள் தங்கள் நிறைவைக் காண்கின்றனர்.
- மற்றவர்களை ஏற்றுக்கொள்ளவும், விளிம்புகளை அடைவதற்கும் கூடுதலான திறன் பெற அன்பு அழைப்பு விடுக்கிறது.
- சமுதாய நட்பின் அடிப்படையில் எல்லைகளைக் கடந்துசெல்ல இயலும் அன்பு.



**நல்லதை ஊக்குவித்தல் என்பது, ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத்தை முன்னெடுத்துச்செல்லும் மதிப்பீடுகளை ஊக்குவிப்பதாகும்.**

## இதனை எப்படி சாதிப்பது?

- சமுதாயம் என்ற அடிப்படையில் சிந்தித்து செயல்படுவதன் வழியாக.
- ஏழ்மை மற்றும் சரிநிகரற்ற நிலைகளின் அமைப்புமுறை காரணங்களுக்கு எதிராக போராடுவதன் வழியாக.
- நலிவுற்ற மக்களோடு, அரசு உடனிருந்து, அவர்களுக்கு உதவி, அவர்களுக்குரிய பணிகளில் முதலீடு செய்வதன் வழியாக.
- எவரும் விலக்கிவைக்கப்படவில்லை என்பதை உறுதிசெய்வதன் வழியாக.
- ஒருமைப்பாடு, மற்றும், சேவை என்ற உலகளாவிய நெறிமுறையை அடிப்படையாகக் கொண்டு, மெய்யான நிலைத்த அமைதியை உருவாக்குவதன் வழியாக.

[ ஒவ்வொரு நபரும் மதிப்புமிக்கவர், மற்றும், மாண்புடன் வாழ உரிமையுடையவர். ]

திருமடல்

# FRATELLI TUTTI

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாய தோழமை பற்றியது

## உலகம் முழுமைக்கும் திறந்ததோர் இதயம்

### உலகளாவிய உடன்பிறந்த நிலைக்கு உதவும் செயல்பாடுகள் எவை?


1. குடியேற்றதாரரை, வரவேற்று, பாதுகாத்து, ஊக்கமளித்து ஒன்றிணைப்பது மற்றும், விளிம்பில் உள்ள அனைவரையும்.

2. இந்நாட்களில், நாம் அனைவரும் ஒன்றிணைந்து காப்பாற்றப்படுவோம், அல்லது, எவரும் காப்பாற்றப்படுவதில்லை, என்ற விழிப்புணர்வை அதிகமாகப் பெறுதல்.

3. ஒருமைப்பாட்டில் அனைத்து மக்களின் முன்னேற்றத்திற்கு உதவும் ஓர் உலகளாவிய நீதி, அரசியல், மற்றும், பொருளாதார ஒழுங்கமைவை உருவாக்குதல்.

### நன்றியுணர்வு என்றால் என்ன?

- தம்மிலே நன்மையானவை என்ற காரணத்திற்காக சிலவற்றை செய்வது.
- தனிப்பட்ட இலாபத்தையோ, வருமானத்தையோ எதிர்பாராமல் செயலாற்றுதல்.
- உடனடி பலன்கள் எதையும் கொணரவில்லையெனினும், அந்நியர்களை வரவேற்றல்.



“நம் உலகின் வெவ்வேறு நாடுகளின் உண்மை மதிப்பு, அவை, பரந்து விரிந்த மனித குடும்பத்தின் பகுதி என எண்ணும் திறன் கொண்டு அளக்கப்படுகின்றது. கடவுள் எப்போதும் இலவசமாகவே வழங்குகிறார்”.

### நலமான கலாச்சாரம் ஒவ்வொன்றும், தன் இயல்பிலேயே, திறந்தமனமும், வரவேற்கும் குணமும் கொண்டது:

- நம் சிந்தனைகளையும் இதயங்களையும் திறந்து செயல்படுவது, வேறுபட்டிருப்போரைப் புரிந்துகொள்ள உதவுகிறது.
- உலகளாவிய ஒன்றிப்பில், ஒவ்வொரு மனித குழுவும் தனக்கேயுரிய அழகைக் கண்டுகொள்கிறது.
- மனிதர்கள், வரம்புக்கு உட்பட்டவர்களாக இருப்பினும், வரம்பற்றவர்களாக வும் உள்ளனர்.

நாடுகள் எனும் குடும்பத்திற்குள், நமக்கு அடுத்திருப்பவர்களை நோக்கி திறந்த உள்ளத்துடன் செயல்படுவது இயலக்கூடியதா?

திருமடல்

FRATELLI TUTTI

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாய தோழமை பற்றியது

# ஓர் உன்னதவகையான அரசியல்

“இயேசுவின் படிப்பினையின்படி, பிறரன்பு, திருச்சட்டம் முழுமையின் தொகுப்பாக உள்ளது.” (காண்க. மத் 22,36-40)

## உன்னத வகையான அரசியல் எது?

- பொது நலனை உண்மையிலேயே ஊக்குவிக்கும் ஒன்று.
- வாக்குகளை பெறுவதை மட்டுமே தேடாத ஒன்று.
- தனி நபர் சார்ந்த வளர்ச்சிக்கு ஒரு வடிகாலாகச் செயல்படும் ஒன்று.
- உற்பத்தி பன்முகத்தன்மைக்கும் வணிக படைப்பாற்றலுக்கும் சாதகமான பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் ஒன்று.
- தொலைநோக்குடையதாகவும், புதிய, ஒருங்கிணைந்த, பல்துறைவடிவ உரையாடல் திறனுடையதாகவும், விளங்கும் ஒன்று.

சமுதாய பிறரன்பை ஆன்மாவாகக் கொண்ட சமுதாய, மற்றும், அரசியல் ஒழுங்கமைவிற்கு, ***Fratelli tutti*** என்ற ஏடு அழைக்கிறது.

- ✓ நாமனைவரும் அழைக்கப்பட்டுள்ளதாக உணரும், அன்பெனும் நாகரீகத்தை நோக்கி முன்னோக்கிச் செல்வதை இயலக்கூடியதாக்குகிறது.
- ✓ எவரையும் விலக்கி வைக்காமல், மனிதர்கள் அனைவரையும் சகோதரர், சகோதரிகளாக ஏற்றுக்கொள்ளல்.
- ✓ பிறரன்பிற்கு, உண்மையின் ஒளி, பகுத்தறிவின் ஒளி, விசுவாசத்தின் ஒளி தேவைப்படுகின்றது.



அனைவரையும் ஒன்றிணைக்கும் சமுதாயப் பரிமாணத்தில், பொதுநலனை அன்புகூரவும், அனைவரின் நலனை திறம்படத் தேடவும் சமுதாயப் பிறரன்பு உதவுகிறது.

அரசியல் நடவடிக்கைகளில், ஒவ்வொருவரும் புனிதத்தன்மையுடையவர், மற்றும், அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர்.

குறைந்தபட்சம் ஒருவராவது, ஒரு சிறந்த வாழ்வை மேற்கொள்ள என்னால் உதவ முடிந்தால், அதுவே என் வாழ்வின் அர்ப்பணத்தை நியாயப்படுத்தும்

# சமுதாயத்தில் உரையாடல் மற்றும் நட்பு

## "உரையாடல்" என்பதன் பொருள் என்ன?

- நெருங்குதல்
- பேசுதல்
- செவிமடுத்தல்
- கவனித்தல்
- ஒருவரையொருவர் அறிந்து புரிந்துகொள்ளுதல்
- பொதுவான களத்தை கண்டுபிடித்தல்



### சந்திக்கும் கலாச்சாரத்தின்படி

நாம் ஒவ்வொருவரும்
அடுத்தவர்களிடமிருந்து ஏதாவது
கற்றுக்கொள்ளலாம்,
ஒருவரும் பயனற்றவர் அல்ல,
ஒருவரும் ஒதுக்கிவைக்கப்படுபவர் அல்ல

### உரையாடலை ஊக்குவிக்கும் ஒரு பன்முக சமுதாயம்:

1. அனைத்துச் சூழல்களிலும் அடுத்தவரின் மாண்பை மதிக்கிறது.
2. வேறுபாடுகளை ஒருங்கிணைக்கிறது, அவ்வழியே உண்மையான நீடித்த அமைதியை உறுதிசெய்கிறது.
3. ஏனைய மக்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்கிறது, அவ்வாறு நட்புநிறை சூழலை பேணுகிறது.

### உரையாடலுக்கு உதவாத மனநிலைகளும், செயல்பாடுகளும் எவை?

- நாம் வெளிப்படுத்தக்கூடிய தாக்குதல், எடுத்துக்காட்டாக, சமுதாய வலைத்தளங்களில்.
- அடுத்தவருக்கு செவிமடுக்காமல் தனித்துப் பேசுவது.
- விரைவாகவும் அவமானப்படுத்தும் விதமாகவும் மற்றவரின் மதிப்பை குறைப்பது.

**உண்மையான சமுதாய உரையாடல் மற்றவர்களின் கண்ணோட்டத்தை மதிக்கும் திறனை உள்ளடக்கியது.**

திருமடல்

# FRATELLI TUTTI

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாய தோழமை பற்றியது

## புதுப்பிக்கப்பட்ட சந்திப்பின் பாதைகள்


அமைதியை நோக்கிய பாதையில், புதுப்பிக்கப்பட்ட சந்திப்பின் செயல்முறைகள் மிகவும் தேவை:

- உண்மையான ஒப்புரவில்.
- ஒவ்வொருவரின் தனித்துவத்தை மறுக்காத பொதுவான திட்டங்களில்.
- அனைத்து மனிதரின் மாண்பை ஏற்றுக்கொள்வதலில், பாதுகாப்பதில், மற்றும் மீள வழங்குவதில்.
- வறியோர், அனைத்தையும் இழந்தோர் மற்றும் தூக்கியெறியப்பட்டோருக்காக தெரிவு செய்வதில்.
- மன்னிப்பின் பொருளை புரிந்துகொள்வதில், போற்றுதலில்.

இயேசு வன்முறையையோ, சகிப்பற்ற தன்மையையோ வளர்க்கவில்லை.
"எழுபது தடவை ஏழு முறை" (மத். 18,22) மன்னிக்கும்படி நற்செய்தி நமக்குச் சொல்கிறது.

### உண்மையான மன்னிப்பு மற்றும் உண்மையான ஒப்புரவு:

- மோதலில் உருவாக்கப்படுகின்றன மற்றும் உரையாடல் வழியே தீர்க்கப்படுகின்றன.
- பகைமைகளிலிருந்தும், வெறுப்பிலிருந்தும் விலகி நிற்கின்றன.
- நீதிக்கான ஆவலை அடித்தளமாகக் கொண்டு, வேறுபாடுகளைப்பற்றிய நேர்மையான விவாதத்தை எளிதாக்குகின்றன.
- மறப்பது என்றோ, தண்டனை விலக்கு என்றோ பொருளல்ல.
- பழிக்குப்பழி என்ற தீய சுழற்சிக்குள் விழுவதில்லை.



"நம் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை சந்திப்பதற்கு நம் இதயங்களை ஏற்பாடு செய்வதற்கு இறைவனிடம் கேட்கிறேன், அவ்வழியே, அரசியல் சிந்தனை, மொழி, கலாச்சாரம் மற்றும் மதத்தில் வேரூன்றி, நமது வேறுபாடுகளை வெற்றிகொள்வோமாக".
திருத்தந்தை பிரான்சிஸ்

திருமடல்
FRATELLI TUTTI
திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்
உடன்பிறந்த நிலை, மற்றும், சமுதாய தோழமை பற்றியது

# நம் உலகில் உடன்பிறந்தநிலை பணியில் மதங்கள்

## நாம் அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்ற உணர்வைக் கொண்டிருந்தால் மட்டுமே, நாம் ஒருவரொருவருடன் அமைதியில் வாழ முடியும்.

உடன்பிறந்த நிலையை கட்டியெழுப்ப வெவ்வேறு மதங்கள் பொருளுள்ள பங்களிப்பைத் தருகின்றன.

கடவுளைத் தேடுவது, ஒவ்வொருவரையும் பயணத்தின் துணையாளர்களாய், உண்மையான சகோதரர், மற்றும் சகோதரிகளாக காண உதவுகிறது.

சமய சுதந்திரத்தையும், ஆன்மாவின் சுதந்திரத்தையும் மறுப்பது, மனித சமுதாயத்தை வறுமைப்ப டுத்துகிறது.

## திருஅவை, திறந்த கதவுகள் கொண்ட இல்லம், ஏனெனில், அவர் ஓர் அன்னை:

1. அவர் பாலங்கள் கட்டுகிறார்
2. அவர் சுவர்களை உடைக்கிறார்
3. அவர் ஒப்புரவின் விதைகளை விதைக்கிறார்

## மதங்களுக்கிடையே அமைதியின் பயணம் சாத்தியம்:

- இறைவன் எவ்விதம் காண்கிறார் என்பதே, இதன் ஆரம்பப் புள்ளியாக இருக்கவேண்டும். ஏனெனில், இறைவன் இதயத்தைக்கொண்டு பார்க்கிறார்.
- நம் அடிப்படை மத நிலைப்பாடுகளில் வன்முறைக்கு அடித்தளம் இல்லை.
- உண்மையான, எளிமையான கடவுளின் வழிபாடு, வாழ்வு, மாண்பு, சுதந்திரம் ஆகிய கணிகளைத் தருகிறது.



மதத் தலைவர்கள் உண்மையான "உரையாடலின் மக்களாய்" இருக்க அழைக்கப்பட்டுள்ளனர்: நம்பகமான இடையாளர்களாய், அமைதியைக் கட்டியெழுப்புவதில் ஒத்துழைக்க.

## கிறிஸ்தவ ஒன்றிப்பு இறைவேண்டல்

அன்பின் மூவொரு இறைவா,
உமது இறை வாழ்வின் ஆழமான உறவிலிருந்து
உடன்பிறந்த அன்பை எங்கள் மீது ஓர் அருவியாக பொழிந்தருளும்.
இயேசுவின் செயல்களில், நாசரேத்தின் குடும்பத்தில்,
முதல் கிறிஸ்தவ குழுமத்தில்,
பிரதிபலித்த அன்பை எங்களுக்குத் தாரும்.

கிறிஸ்தவர்களாகிய நாங்கள் நற்செய்தியை வாழ அருளும்,
கிறிஸ்துவை ஒவ்வொரு மனிதரில் கண்டுணர,
அறையப்பட்ட அவரை,
கைவிடப்பட்டோரின், மற்றும்
எங்கள் உலகத்தால் மறக்கப்பட்டோரின்
துன்பங்களிலும்,
புதிய துவக்கத்தை செயலாற்றும்
ஒவ்வொரு சகோதரர், அல்லது, சகோதரியின்
உயிர்ப்பிலும் அடையாளம் காண அருளும்.

வாரும், தூய ஆவியாரே,
உலகின் அனைத்து மக்களிலும் பிரதிபலிக்கும்
உமது அழகை வெளிப்படுத்தும்,
இதன் வழியே நாங்கள்,
அனைவரும் முக்கியமானவர்கள், தேவையானவர்கள்,
கடவுளால் அன்புகூரப்படும் சமுதாயத்தின்
பல்வேறு முகங்கள் என்பதை
நாங்கள் மீண்டும் கண்டுணரச் செய்தருளும்.

ஆமென்